விகடன்

**கர்நாடகா: கத்தியைக் காட்டியவர்மீது துப்பாக்கிச்சூடு; போலீஸாரின் தாக்குதலுக்கு வலுக்கும் கண்டனம்!**

Published:13 Feb 2023 6 PMUpdated:13 Feb 2023 6 PM



*கத்தி வைத்திருந்த நபரை தாக்கும் போலீஸார்*

**“கர்நாடக மாநிலத்தில், மனநலம் குன்றிய நபரை போலீஸார் துப்பாக்கியால் சுட்டு, தாக்கியது மிகவும் கொடூரமானது. போலீஸார் அனைத்து நடைமுறை களிலும் சட்டத்தை மீறி செயல்பட்டிருக்கின்றனர்.” – மக்கள் கண்காணிப்பகத்தின் ஹென்றி டிபேன்**

கர்நாடக மாநிலம், காலபுராகி மாவட்டத்தின், சந்தைப்பகுதியில் கடந்த வாரம், ஒரு நபர் கத்தியைக் காட்டி அங்கிருந்தவர்களை மிரட்டினார். சம்பவ இடத்துக்கு வந்த சோவ் போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ வஹீத் கோத்வால் தலைமையிலான போலீஸார், கத்தியைக் கீழே போடும்படி கூறியபோதும், அந்த நபர் கத்தியைக் கீழே போடாமல் இருந்தார். அப்போது, எஸ்.ஐ வஹீத் கோத்வால் தனது பிஸ்டலை எடுத்து, அந்த நபரின் காலில் சுட்டார். நிலைதடுமாறி கீழே விழுந்த அந்த நபரை அவர் மீண்டும் காலில் துப்பாக்கியால்



*துப்பாக்கியால் சுட்ட எஸ்.ஐ*

சுட்டதுடன், ஐந்துக்கும் மேற்பட்ட போலீஸார் அவரை பூட்ஸ் காலாலும், லத்தியாலும் கடுமையாகத் தாக்கினர்.
விசாரணையில், அந்த நபர் அதே பகுதியைச் சேர்ந்த அப்துல் ஜாபர் (30) என்பதும், மார்க்கெட்டில் காய்கறி விற்பனைக் கடையில் வேலை செய்ததும் தெரியவந்தது. இந்த நிலையில், அவர் குடும்பத்தினர், ``அப்துல் ஜாபர் மனநிலை சரியில்லாமல் அதற்காக மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார். அவரைத் தாக்காமல், துப்பாக்கியால் சுடாமல் பிடித்திருக்கலாம்" என நிருபர்களிடம் வருத்தத்துடன் தெரிவித்திருக்கின்றனர்.

**போலீஸாரின் கொடூரத் தாக்குதல்...**

இது குறித்து நம்மிடம் பேசிய, மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன், “கர்நாடக மாநிலத்தில், மனநிலை பாதிக்கப்பட்ட நபரை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுத் தாக்கியது மிகவும் கொடூரமானது. போலீஸார் அனைத்து நடைமுறைகளிலும் சட்டத்தை மீறி செயல்பட்டிருக்கின்றனர். துப்பாக்கியை போலீஸார் பயன்படுத்த, இந்தியச் சட்டப்படி சில கட்டுப்பாடுகள், நடைமுறைகள் இருக்கின்றன.



ஆனால், இதில் எதையுமே அவர்கள் பின்பற்றவில்லை. துப்பாக்கியால் சுட்டதும் அந்த நபர் நிலைதடுமாறி விழுந்த நிலையில், அவரைக் கொடூரமாகத் தாக்கியிருக்கின்றனர். அந்த நபரைத் தாக்கிய போலீஸார்மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் தகவல் தெரிவிப்பேன். இது குறித்து சுயமாக நீதிமன்றம் முன்வந்து வழக்கு தொடுக்க வேண்டுமென வலியுறுத்தி, இந்த வீடியோவைக் கர்நாடக தலைமை நீதிபதிக்கு அனுப்பிவைப்பேன். இது போன்ற சம்பவங்களைப் பார்த்துக்கொண்டு **அமைதியாக இருக்க முடியாது**” என காட்டமாகத் தெரிவித்தார்.

https://www.vikatan.com/news/crime/karnataka-police-shot-a-young-man-who-creates-a-ruckus-with-a-knife-in-his-hand